பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 24 புதன்கிழமை 12.10.2022 கதிர் 228

## வல்லையில் 3 பெண்களிடம் 10 பவுண் நகைகள் வழிப்பறி

யாழ்ப்பாணம், வல்லைப் பகுதியில் மூன்று பெண்களிடம் சுமார் 10 பவுண் தங்க நகைகள் வழிப்பறி கொள்ளை இடம்பெற்றுள்ளது.

வல்லை வெளிப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, ☞2

# எரிக் சொல்ஹெய்முக்கு சர்வதேச ஆலோசகர் பதவி

### ஜனாதிபதி ரணில் நியமனம்



நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். ☞2



## ஒன்பது வயது சிறுமி கொடூர சித்திரவதை

### தந்தையின் இரண்டாவது மனைவி கைது

ஒன்பது வயது சிறுமியை சித்திரவதை செய்த 29 வயதுடைய பெண் ஒருவரைக் கடுவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடுவெல பிரதேசத்தில் உள்ள கனிஷ்ட கல்லூரி ஒன்றில் தரம் 4 இல் கல்வி கற்கும் சிறுமி தனக்கு நேர்ந்த சித்திரவதை குறித்து கல்லூரியின் சமையல்காரரிடம் கூறியதையடுத்து, அவர் இது தொடர்பில் வகுப்பாசிரியைக்கு அறியப்படுத்தியுள்ளார்.

பின்னர், ஆசிரியை வழங்கிய அறிவிப்பின் பேரில் அதிபர், குறித்த சிறுமியுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு ☞8

# முடியாட்சி தருவதாகச் சொன்னாலும் ராஜபக்ஷிக்களுடன் சேரவே மாட்டேன்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளுக்காக, சலுகைகளுக்காக எந்தக் கொள்கைகளையும் காட்டிக்கொடுக்கமாட் டேன். முடியாட்சி தருவதாகச் சொன்னாலும் ராஜபக்ஷக்களுடன் சேர்ந்து நாட்டையோ, 220 இலட்சம் மக்களையோ, கட்சியையோ காட்டிக்கொடுக்கமாட்டேன்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தெஹியத்தகண்டியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-. ☞8

## கைதான திலினி பிரியமாலி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்கள்



நிதிமோசடி குற்றச்சாட்டில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி என்ற பெண், இதற்கு முன்னர் நீண்ட காலமாகவே பல்வேறு நிதிமுறைகேடுகளுடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந் துள்ளது.

1982ஆம்ஆண்டு களுத் துறை யில் பிறந்த அவர், பல்வேறு ஜன ரஞ்சக பிரமுகர்களிடம் இருந்து பல கோடிகளை மோசடி செய்து, அதி சொகுசு வாழ்க்கையை நடத்தி வந்துள்ளார்.

இந்தநிலையில், ☞2

## இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு!

### கொழும்பில் பரபரப்பு

கொழும்பில் இருவேறு கடற் பகுதிகளில் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## வினோ எம்.பிக்கு மாரடைப்பு வைத்தியசாலையில் சேர்ப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாரடைப்பு காரணமாக நேற்றுப் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ☞2

### இராணுவ ரீதியாக மட்டுமன்றி

# உணவு, பொருளாதாரத்திலும் தங்கியுள்ள நாட்டின் பாதுகாப்பு

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



நாட்டின் பாதுகாப்பு இராணுவத்தில் மட்டுமன்றி உணவு மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பிலும் தங்கியிருக்கின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போணையை உறுதி செய்யும் நிகழ்ச்சி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் ☞8

## பல இலட்சங்களை சுருட்டியவர் கைது!

நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுக்கு சன்மானம் வழங்குவதாகக் கூறி சமூக ஊடகங்கள் மூலம் பல இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் அதிகாரிகளினால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர் தனது வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டுள்ளார்.

இதன்படி, குறித்த சந்தேக நபர் பண மோசடி, குற்றவியல் துஷ்பிரயோகம், குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் பணமோசடி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் ☞2

## வல்லையில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்லை வெளிப் பகுதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களை வழிமறித்த வழிப்பறிக் கொள்ளையர் கள் கத்தியை அவர்களின் கழுத்தில் வைத்து , அவர்கள் அணிந்திருந்த ஒன்றரை பவுண் தங்க சங்கிலி உட்பட சுமார் 08 பவுண் நகைகளை வழிப்பறிச் சென்று அங்கிருந்து தப்பிச் சென்றுள் ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு சில மணி நேரத்தில், வல்லை வெளிப் பகுதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவரைப் பின்னால் வந்து மோதி அப்பெண்ணை விபத்துக்கு உள்ளாக்கி விட்டு அப்பெண் அணிந்திருந்த சுமார் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி மற்றும் பெறுமதி யான கையடக்கத் தொலைபேசி என் பவற்றைக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வலிகாமம் பகுதியையும் வடமராட் சிப் பகுதியையும் இணைக்கும் பகுதி யாக வல்லைப் பகுதி காணப்படுகின்றது. இந்தப் பகுதி நீரேந்து பகுதியாகக் காணப்படுவதுடன் ஆள் நடமாட்டம் குறைந்த குடியிருப்புக்கள் அற்ற பகுதி யாகும்.

இந்தப் பகுதி இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவதால், அப் பகுதிகளில் வழிப்பறி கொள்ளையர் களின் நடமாட்டம் அதிகரிப்பதால், அப்பகுதி ஊடாகப் பயணிப்பது ஆபத்து நிறைந்ததாகத் தற்போது மாறி வருகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்புகள் அப்பகுதியில் மின் விளக்குகளைப் பொருத்துதல் உள்ளிட்ட உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள் ளனர்.

## வினோ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டு பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தற்போது அவரின் உடல்நிலை தேறி வருகின்றது எனவும், வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக வைத்தி யசாலையில் தங்கியிருக்கின்றார் என வும் தெரியவருகின்றது.

## எரிக்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டங்களுக்கான நிறை வேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவரான எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று இலங்கை வந்திருந்தார். இந்தநிலையில், இன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே இந்த நியம னம் வழங்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் இராஜதந்திரியான எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேயின் வெளிவிவகார ஆலோ சகராகக் கடந்த 2000 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு நடை பெற்ற சமாதானப் பேச்சுக்களில் ஏற்பாட் டாளராகச் செயற்பட்டதனது பங்களிப்பை அவர் வழங்கியிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

## இரு ஆண்களின்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவகையில், கொள்ளுப்பிட்டி கடற்பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தைக் கடற்படையினர் மீட் டுள்ளனர்.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

அத்தோடு மட்டக்குளி கடற்பகுதி யிலிருந்து இரு கைகளும் அற்ற நிலை யில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மட் டக்குளிப் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், குறித்த சடலத்தின் கைகளை முதலைகள் உட்கொண் டிருக்கலாம் என்றும், அந்தச் சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்குளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கைதான.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் அவர் கைது செய்யப் பட்டார். அரசியல்வாதிகள், நடிகர்கள் என்று பல்வேறு தரப்பிடம் இருந்து அவர் பல கோடி ரூபாய்களை மோசடி செய்தமை தெரியவந்ததை அடுத்தே கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும், அவர் பலவருடங்களுக்கு முன்னர் சாதாரண நபர்களிடமும் மோ சடிகளைப் புரிந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல வருடங்களுக்கு முன்னர் அவர் அல்டோ வகை கார் ஒன்றைப் பெற் றுக்கொள்வதற்காக அதன் உரிமை யாளருக்குப் போலியான காசோலை ஒன்றை வழங்கியமையே அவரது முதலாவது மோசடியாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இவ்வாறு ஏமாற்றப்பட்ட கார் உரிமையாளருக்குக் கிடைக்கப்பெற்ற கல்கிஸைப் பகுதியில் உள்ள முகவரி ஒன்றுக்குச் சென்ற போது, அங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் தி லினி பிரியமாலி மோசடிகளை புரிந் துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் மீண்டும் 2020ஆம் ஆண்டு குறித்த நபர் திலினி பிரியமாலியை பேஸ்புக் மூலம் தொடர்பு கொண் டுள்ளார். அதன்போது திலினி சுகபோக வாழ்க் கையை நடத்தி வந்தமை தெரியவந்தது என்று குறித்த நபர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## பல இலட்சங்களை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர். அங்கொட பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய ஹிம்புட்டானா என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், சட்ட விரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622





40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்

douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha , Colombo 10

0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com

MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## மீண்டெழ முடியாத இக்கட்டு

மீண்டெழுவது குறித்துத்தான் எல்லோரும் பேசுகின்றோம்.

ஆனால் எவையெவை மீண்டெழக் கூடாவோ அவை எல்லாம் மீண்டெழும் போல தெரிகின்றன. எவையெவை மீண்டெழ வேண்டும் என்று எண்ணுகின்றோமோ – எதிர்பார்க்கின்றோமோ – அவை மீண்டெழுவனவாக இல்லை. மேலும் மேலும் வீழ்ந்து கொண்டிருக்கின்றன.

சரிந்து அதலபாதாளத்துக்குள் விழுந்திருக்கும் நாட்டின் பொருளாதாரம் மீண்டெழ வேண்டுமென எல்லோரும் எதிர்பார்க்கிறோம். அதற்காகப் பிரார்த்திக்கிறோம். அரசும் மக்களும் துடியாய்த் துடிக்கின்றோம். ஆனால், அது நடப்பதாக இல்லை. மாறாக, இன்னும் பொருளாதாரம் சரிந்து கொண்டு செல்கிறது. விலைவாசி எகிறுகின்றது.

நல்லிணக்கமும் புரிந்துணர்வும் மீண்டெழ வேண்டும், புத்துயிர்ப்புப் பெற வேண்டும், இன சௌஜன்யம் மேன்மையுற வேண்டும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் இனவெறுப்புத்தான் வளர்கிறது. ஒருமைப்பாடும் ஐக்கியமும் மீண்டெழுவனவாக இல்லை. சரிந்து விழுந்தே கிடக்கின்றன.

பேரினவாதமும், பௌத்த, சிங்கள மேலாண்மை வெறிப்போக்கும் அடங்க வேண்டும் என எதிர்பார்த்தால் அவை மீண்டெழுந்து அல்ல, இப்போது மிரண்டெழுந்து நிற்கின்றன.

எதேச்சாதிகார ஆட்சியைக் கட்டவிழ்த்துவிட்ட, ராஜபக்ஷக்களின் அதிகாரம் தளர வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். மாறாக, அது மீண்டெழுந்து வருவது கண்கூடு.

நாடு இந்த அழிவு நிலையில் இருந்து – பேரவலக் கட்டத்திலிருந்து – மீண்டெழுவதற்கு என்னென்ன அவசியமென அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்துகின்றாரோ அவையெல்லாம் செயலில் இடம் பெறுவனவாக இல்லை. நாடு மீண்டெழ, தேசியக் கொள்கை ஒன்று – மாறாத கொள்கைப் போக்கு ஒன்று – அவசியமென்று அவர் வலியுறுத்துகின்றார். ஆனால் அது எதுவும் சாத்தியமாவதாகத் தெரியவில்லை.

இந்த நாடு தனித்து ஓரினத்துக்கு, ஒரு மதத்துக்கு, ஒரு மொழிக்கு, ஒரு பிரிவினருக்குச் சொந்தம் என்று இல்லாமல், இது பல்லின, பல் மொழி, பல் மத நாடாக மிளிர்ந்தால்தான் இந்தச் சிறிய தீவுக்கு முற்றிலும் மீண்டெழும் வாய்ப்புச் சாத்தியம் என்று தமிழ்த் தேசிய முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறுகின்றார்.

நாடு மீளெழுச்சி பெறுவதற்கு சிறந்த இளம் தலைமுறைத் தலைவர்கள் உருவாக வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா வலியுறுத்துகின்றார். ஆனால் அரசியல் தலைமைத்துவங்களைக் கட்டிப்பிடித்து, தமது வாழ்க்கைக் காலசொத்து என அவற்றை அரவணைத்து வைத்திருக்கும் மூத்த தலைவர்கள் – வயோதிபப் பிரமுகர்கள் – தங்களிடத்தை விட்டு விலகுகின்றார்கள் இல்லை. அடுத்த தலைமுறைக்கு இடமளிக்கின்றார்கள் இல்லை. சேற்று நீர் போலத் தேங்கி நிற்கின்றார்கள்.

மீண்டெழ வேண்டிய விடயங்கள் எல்லாம் பேச்சோடு போக, மீண்டெழாமல் அடங்கிப் போக வேண்டிய துஷ்டத்தனங்கள் எல்லாம் எகிறிக் குதித்துக் கொண்டு நிற்கின்றன. இதுதான் நமது நாட்டின் மீள முடியாத – மீண்டெழ முடியாத – இக்கட்டு நிலைமை.

# எந்தவொரு பிரஜையும் பட்டினியால் உயிரிழக்க இடமளிக்கப்படமாட்டாது!

## அரசாங்கம் திட்டவட்ட அறிவிப்பு

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை இனங்கண்டு, அவர்களுக்கு நிதி நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் எந்தவொரு பிரஜையும் பட்டினியால் உயிரிழப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை நடைபெற்ற போது, பொருளாதார நெருக்கடிகளால் உணவைப் பெற்றுக் கொள்ள முடியாமலுள்ள மக்கள் தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக வினவப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்–

பொருளாதார நெருக்கடிகளால் உணவைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் இருந்தால் அது தொடர்பில் அரசாங்கத்துக்கு அறிவிக்குமாறு சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பிரஜையும் பட்டினியால் உயிரிழப்பதற்கு இடமளிக்க முடியாது என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். நாடளாவிய ரீதியில் இவ்வாறு உணவைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் தொடர்பில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட அதிபர்கள் ஊடாக தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மிகவும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை இணங்கண்டு அவர்களுக்கு நிதி நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. – என்றார்.

# இரண்டு ஆஸ்திரேலியர்கள் மீது இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டு!

பல மில்லியன் டொலர் பெறுமதியான உட்கட்டமைப்பு ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கியதாக இரண்டு ஆஸ்திரேலியர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2009 முதல் 2016 வரை செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக இவ்வாறு இலஞ்சம் வழங்கப்பட்டதாக இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் 67 மற்றும் 71 வயதுடைய பிரஜைகள் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு வழிகாட்டல் ஆவணம் வெளியீடு!

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பிராந்தியத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல் ஆவணம் திங்கட்கிழமை பணிமனையின் கேட்போர்கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களின் ஆலோசனைக்கமைய தொற்று நோய்த்தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பசால் அவர்களின் ஏற்பாட்டில் பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ ஹமீட் அவர்கள் மற்றும் குழுவினர் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

பொருளாதார முகாமைத்துவம் கருதி மென்பொருள் ஆவணமாக வெளியிடப்பட்ட இந்தப் பிரதிகள் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லாஃப்ஸ் எரிவாயுவின் விலைகள் குறைப்பு!

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் தனது விலைகளை குறைத்துள்ளதாக நேற்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளது.

அதற்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 500 ரூபாவாலும் ,5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 200 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5 ஆயிரத்து 300 ரூபாவாகவும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விலை 2 ஆயிரத்து 120 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக லாஃப்ஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



## 14 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்:

# 15 வருட கடூழிய சிறை விதிக்கப்பட்ட முன்னாள் அரசியல் வாதி விடுதலை!

14 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தமைக்காக 15 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அரசியல்வாதி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அக்குரஸ்ஸ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சாருவ லியனகே சுனிலை விடுதலை செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) உத்தரவிட்டது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றால் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டதுடன், அவருக்கு 2 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த உத்தரவை சவால் செய்து மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்த நிலையில் குறித்த மனுமீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டும் விழா மே 06 இல்



லண்டன், ஒக்.12

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டும் விழா அடுத்த ஆண்டு மே 06 ஆம் திகதி நடைபெறுகின்றது .

இங்கிலாந்தில் நீண்ட காலம் ராணியாக இருந்த 2 ஆம் எலிசபெத் கடந்த மாதம் 8 ஆம் திகதி தனது 96 வயதில் மரணமடைந்தார். அதை தொடர்ந்து 2 நாள்களுக்கு பின் அவரது மகன் சார்ள்ஸ் இங்கிலாந்தின் புதிய மன்னராக ஆனார்.

அவர் மூன்றாம் சார்ள்ஸ் என அழைக்கப்படுகிறார். கடந்த மாதம் சார்ள்ஸ் மன்னர் அரியணை ஏறினார்.

இந்நிலையில், மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா, அடுத்த ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என பக்கிங்ஹாம் அரண்மனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரச குடும்பம் வெளியிட்ட டுவிட்டர் பதிவில், 6 மே 2023 சனிக்கிழமையன்று வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் எங்கள் மாட்சிமை மன்னரின் முடிசூட்டு விழா நடைபெறுகிறது. இந்த விழாவில்

எங்கள் மாட்சிமை வாய்ந்த மன்னர் சார்ள்ஸ் III, ராணி மனைவியுடன் முடிசூட்டப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு 74 வயதாகிறது. இதன் மூலம், இங்கிலாந்தின் வரலாற்றில் முடிசூட்டப்படும் மிக வயதான நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார். லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் விழாவில் மன்னர் சார்ள்ஸ் அவரது மனைவியுடன் முடிசூட்டப்படுவார். இதன்மூலம், அரசராக அவரது ஆட்சி அதிகாரபூர்வமாக தொடங்கும்.

பாரம்பரிய மரபுப்படி, கையில் செங்கோல், தடி ஆகியவற்றை ஏந்திக்கொண்டு மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் அரியணையில் அமர்வார். மேலும், மூன்றாம் சார்லஸ்!மன்னரின் முடிசூட்டு விழா எளிமையாக நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


# அத்தியாவசியப் பொருள்கள் விலை உயர்வு: இங்கிலாந்தில் வீதிக்கு இறங்கினர் மக்கள்!

லண்டன், ஒக்.12

ரஷ்யா மீது சர்வதேச நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடை காரணமாக சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இதனால் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ரஷ்யாவிடம் எரிவாயு இறக்குமதியை நம்பி இருந்த நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இங்கிலாந்தில் பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. எரியாற்றல் செலவினம் கடந்த ஆண்டு இருந்ததை விட இந்த ஆண்டு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இதற்குஏற்ற வகையில் ஊதிய உயர்வு உள்ளிட்டவை வழங்கப்படாததால், அந்நாட்டு மக்கள் பொருளாதார ரீதியாக பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வை கண்டித்து இங்கிலாந்தின் பல்வேறு நகரங்களில் பொதுமக்கள் போராட்டத்தில்ஈடுபட்டனர். லண்டன் நகரில் உள்ள கிங்ஸ் சதுக்கத்தில்




திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள், 'விலை உயர்வை கட்டுப்படுத்துங்கள், மக்களை அல்ல' என முழக்கமிட்டனர். மேலும் பிரச்சினைகளை போக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

எரிசக்தி விலை உயர்வை சமாளிப்பதற்கான திட்டங்களை இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் அறிவித்துள்ள நிலையில், தற்போதைய சூழலுக்கு அது போதுமானதாக இருக்காது என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேஸ்புக் , வாட்ஸ்அப் உரிமையான மெட்டோ பயங்கரவாத நிறுவனமாம்

## இப்படி அறிவித்தது ரஷ்யா




அமெரிக்காவை சேர்ந்த உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான மெட்டா பிளாட் பார்ம்ஸ் இன்கார்ப் நிறுவனத்தை பயங்கரவாத நிறுவனமாக அறிவித்துத் தடைவிசெய்யப்பட்ட பட்டியலில் ரஷ்யாவின் நிதி கண்காணிப்பு நிறுவனம் ரோஸ்பின்மானிடரிங் இணைத் துள்ளது. இதன்மூலம், பிரபல சமூக வலை தளங்களான பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப்பின் உரிமையாளரான மெட்டாவை தீவிரவாத மற்றும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் ரஷ்யா சேர்த்துள்ளது.

இதனையடுத்து, இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற மெட்டா நிறுவனம் அளித்து வரும் சேவைகள் ரஷ்யாவில் துண்டிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் ரஷ்யாவில் தீவிரவாத நடவடிக்கையில் மெட்டா நிறுவனம் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டது. இதனையடுத்து, ரஷ்யாவின் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு ஆணையம், பேஸ்புக்கைத் தடை செய்தது. ரஷ்ய அரசாங்க ஆதரவு செய்திகளை பயனர்கள் பார்ப்பதை பேஸ்புக் கட்டுப்படுத்தியதாகக் கூறப்பட்டது. உக்ரைன் மற்றும் போலாந்து ஆகியநாடுகளில் இருந்து, ரஷ்ய படையெடுப்பாளர்களை எதிர்த்து வன்முறைக்கு அழைப்பு விடுத்திருந்த பேஸ்புக் பதிவுகளை மெட்டா தற்காலிகமாக அனுமதித்ததாகவும் கூறப் பட்டது. மெட்டா தரப்பில், தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அது வாதாடியது. ஆனால் இந்த வழக்கை ஜூன் மாதம் விசாரித்த மாஸ்கோ நீதிமன்றம் ஒன்று, மெட்டாவின் மேல் முறையீட்டை நிராகரித்தது. இந்த நிலையில், நேற்றையதினம் மெட்டாவை தீவிரவாத மற்றும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மத்திய அமெரிக்காவை நிலைகுலைய வைத்த ஜூலியா புயலில் 28 பேர் பலி!

அமெரிக்கா, ஒக்.12

மத்திய அமெரிக்க நாடுகளான கவுதமலா மற்றும் எல் சல்வடார் நாடுகளை 'ஜூலியா 'என்கிற சக்தி வாய்ந்த புயல் புரட்டிப்போட்டுள்ளது.

நேற்று முன்தினம் கவுதமலாவின் மத்திய நகரங்களை 'ஜூலியா' புயல் பந்தாடிய நிலையில் அங்கு

சூறாவளி காற்றுடன் கனமழை கொட்டித்தீர்த்தது. இதை தொடர்ந்து கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. வீதிகள், மேம்பாலங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. புயல், மழை மற்றும் வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அந்த நாட்டின் அதிபர் அலெஜான்ட்ரோகியாமட்டேய் அங்கு தேசிய பேரிடர் நிலையை அறிவித்துள்ளார்.

இந்நிலையில், கவுதமாலாவை பந்தாடிய 'ஜூலியா' அண்டை நாடான எல் சல்வடாரை புரட்டிப்போட்டது. அங்கு புயலை தொடர்ந்து கனமழை கொட்டித்தீர்த்ததால் பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாகின. குடியிருப்பு பகுதிகளை வெள்ளம்வசூழ்ந்ததால் 1,000க்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்தனர். இதனிடையே 'ஜூலியா' புயலுக்கு கவுதமலா நாட்டில் 18 பேர் பலியான நிலையில், எல் சல்வடாரில் 5 இராணுவ வீரர்கள்

உள்பட 10 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் பலர்

படுகாயமடைந்துள்ள நிலையில், பலர் மாயமாகி உள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது அர்ஜெண்டினா தேசம்

## பணவீக்கம் இல்லை மீறி அதிகரிப்பு




புவனோஸ் ஏரெஸ், ஒக்.12

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான அர்ஜெண்டினாவில், கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் போர், ஐரோப்பாவில் எரிசக்தி பற்றாக்குறை அச்சுறுத்தல், விநியோக சங்கிலி இடையூறுகள் உள்ளிட்ட காரணங்களால் சர்வதேச அளவில் பொருளாதார மந்தநிலை உருவாகி வருகிறது.

மேலும் பல்வேறு நாடுகளில் எரிவாயு, அத்தியவாசியப் பொருட்களின் விலை கணிசமாக அதிகரித்துள் ளது. எதிர் வரும் காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த நிலையில் தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான அர்ஜெண்டினாவில், கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த ஒகஸ்ட் மாத நிலவரப்படி அங்கு பணவீக்கம் 78.5 வீதமாக உயர்ந்துள்ளதாகவும், இது கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவில் மிக அதிகமான சதவீதம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிலை தொடர்ந்தால் நடப்பாண்டில் அர்ஜெண்டினாவில் பணவீக்கம் 100 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் அர்ஜெண்டினாவில் பணவீக்கம் அதிகரித்துள்ள போதிலும், அங்கு இந்த ஆண்டு பொருளாதாரம் பிராந்திய சராசரியை விட 4% உயரும் என உலக வங்கி கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நீதிமன்ற வளாகத்தில் தீக்குளித்தவர் மரணம்

சென்னை,ஒக்டோபர்12

மகனுக்கு சாதிச்சான்றிதழ் கிடைக்காத மன வருத்தத்தில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தீக்குளித்து தற்கொலைக்கு முயன்றவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

காஞ்சீபுரம் மாவட்டம் படப்பை பகுதியைச் சேர்ந்தவர் வேல்முருகன் (வயது 49). இவர் நேற்று பிற்பகலில் சென்னை உயர் நீதிமன்ற வடக்கு கோட்டை சாலையில் உள்ள நுழைவு வாயில் முன்பு வந்தார். அப்போது திடீரென்று தலையில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்தார். கண்இமைக்கும் நேரத்தில் அவரது உடல் தீப்பிடித்து எரிந்தது. உடல் எரிந்த நிலையில் உயர் நீதிமன்ற உள்ளே நடந்து சென்றார். தொடர்ந்து உடலில் பெட்ரோல் ஊற்றியபடி சென்றதால், தீ வேகமாக பரவியது. இதனால் அங்கிருந்த பொலிஸாரால் அவரை நெருங்க முடியவில்லை. இலவச சட்ட ஆலோசனை மையம் அருகில் வந்தவுடன் தீயணைக்கும் எந்திரம் மூலம், அவரது உடலில் எரிந்த தீயை அணைத்தனர். பின்னர் போர்வையை அவர் மீது போர்த்தினார்கள். இந்த தகவல் அறிந்ததும் வக்கீல்களும், வழக்கு விசாரணைக்கு வந்த பொதுமக்களும் அங்கு கூட்டமாக திரண்டு விட்டனர். அந்த பதற்றமான சூழ்நிலையிலும், தீக்குளித்த வேல்முருகன், அங்கு கூடிநின்றவர்கள் மத்தியில் சத்தம் போட்டு பேசினார். அப்போது அவர், 'நான் மலைக்குறவன் இனத்தைச் சேர்ந்தவன். எனது மகனுக்கு சாதிச்சான்றிதழ் கேட்டு அரசு அலுவலகங்களில் அலைந்து பார்த்தேன். ஆனால் சாதிச்சான்றிதழ் கிடைக்கவில்லை. அந்த வருத்தத்தில் இந்த முடிவை எடுத்தேன். எனது இந்த முடிவின் மூலம், இனிமேல் பொதுமக்களுக்கு உடனுக்குடன் சாதிச்சான்றிதழ் கிடைக்கும் என்று நம்புகிறேன்' இவ்வாறு அவர் சத்தம் போட்டு பேசினார். ஐகோர்ட்டு வக்கீல் தொண்டன் சுப்பிரமணி உள்ளிட்ட வக்கீல்கள் அம்புலன்ஸ் வேனை வரவழைத்தனர்.

அவரை காப்பாற்ற முயன்ற பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் தினகரன் என்பவருக்கும் தீக்காயம் ஏற்பட்டது. இதற் கிடையே உடல் முழுவதும் தீக்காயங்களுடன், அக்புலன்ஸ் வேனில் ஏற்றி செல்லப்பட்ட வேல்முருகன் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச் சைக்கு சேர்க்கப்பட்டார்.

மேலும் சைதாப்பேட்டை பெண் மாஜிஸ் திரேட் அனிதா ஆஸ்பத்திரிக்கு நேரில் சென்று வேல்முருகனிடம் வாக்குமூலம் பெற்றார். இந்த நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த வேல்முருகன் பரிதாபமாக உயிரிழந்தார். தீக்குளித்த வேல்முருகனுக்கு ஒரு மகனும், 2 மகள்களும் உள்ளனர்.

# இந்தியக் கடற்படை மிக் போர் விமானம் விபத்துக்குள்ளாகிக் கடலில் வீழ்ந்தது




பானாஜி,அக்.12

கோவா கடற்கரை அருகே பயிற்சியில் ஈடுபட்டிருந்த மிக் 29கே போர் விமானம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

கோவா கடலோரப்பகுதியில் இன்று இந்திய கப்பல்படையின் மிக் 29கே ரக போர் விமானம் வழக்கமான பயிற்சி பயணத்தை மேற்கொண்டது.

பயிற்சியை முடித்துக்கொண்டு தளத்திற்குத் திரும்பும்போது திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்த போர் விமானம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

சம்பவம் குறித்து அறிந்து உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த மீட்புப்படை விபத்தில் சிக்கிய விமானத்தில் இருந்து விமானியைப் பாதுகாப்பாக மீட்டனர். விமானியின் உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து இந்திய கடற்படை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# தங்க கவசவாலன் ரக அரிய பாம்பு 142 ஆண்டுகளின் பின் பிடிபட்டது

வயநாடு மாவட்டம் சுல்தான்பத்தேரி அருகே பெம்பரமலை பகுதி உள்ளது. இப்பகுதி கடல் மட்டத்தில் இருந்து 1400 அடி உயரத்தில் உள்ளது. அங்கு தொழிலாளர்கள் சிலர் வனப்பகுதியில் மண்ணை தோண்டி கொண்டிருந்தனர். அப்போது மண்ணுக்குள் இருந்து பாம்பு ஒன்று வெளியே வந்தது. இதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டனர். மண்ணுக்குள் இருந்து வந்த தங்க கவசவாலன் என்ற அதிசய பாம்பு பிடிபட்டு உள்ளது. இதுகுறித்து அவர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

தங்க கவசவாலன் எனும் இந்த பாம்பு, 142 ஆண்டுகளுக்கு பின்னர் வனப்பகுதியில் மண்ணுக்குள் இருந்து வெளியே வந்தது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. கடந்த 1880ம் ஆண்டு இதேபோல் ஒரு பாம்பு பிடிபட்டது.

இதுகுறித்து வனத்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதன் முடிவில் பாம்பு குறித்த முழு விவரங்கள் தெரியவரும் என கூறப்படுகிறது.

# பாம்பன் பாலத்தில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்தில்!

## 8 பேர் படுகாயம் அடைந்தனர்



ராமேஸ்வரம் பாம்பன் பாலத்தில் வந்த அரசு மற்றும் தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகின. அப்போது பாலத்தின் தடுப்பு சுவரில் தனியார் பஸ் மோதி நின்றது. இதனால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் விரைந்து வந்து 2 பஸ்களில் சிக்கி இருந்தவர்களை மீட்டு அம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தர். பலர் லேசான காயத்துடன் உயிர்தப்பிய நிலையில் 8 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தினர். மேலும், விபத்துக்கு உள்ளான இரு பஸ்களையும் சாலையில் இருந்து அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர்செய்தனர். இந்த விபத்தால் பாம்பன் பாலத்தில் பரபரப்பு ஏற்பட்டது. விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதலாவது சூரிய மின்னுற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் நேற்றுத் திறந்துவைப்பு!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட நாவற்காடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு, சூரிய சக்தி மின்நிலையத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

சுமார் இரு நூற்றியைம்பது கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தச் சூரிய சக்தி மின்நிலையத்தின் ஊடாக பிறப்பிக்கப்படும் மின்சாரம் நேரடியாக மின்சார சபைக்கு வழங்கப்பட்டு மக்கள் பாவனைக்கான பொது மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த சூரிய சக்தி மின்நிலையத்தின் ஊடாக சுமார் 200 பேர் வரை நேரடியாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இங்கு 18 ஆயிரத்து 676 சூரிய மின் கலங்கள், 47 மாற்றிகள் மற்றும் 04 டிரான்ஸ்போமர்கள என்பன இயங்கி 10 மெகாவாட் மின்சாரத்தைப் பிறப்பிக்கின்றன.

40 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சூரிய சக்தி மின்நிலையத்தில், மேலதிகமாக உள்ள நிலப்பரப்பில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலையை கருத்திற்கொண்டும் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கில் பயிர்ச்செய்கை மேற்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சரின் செயலாளர்கள், மின்சார சபை உயரதிகாரிகள், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட மேலும் பல துறைசார் அதிகாரிகள் அதிதிகளாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

மேலும் இந் நிகழ்வின்போது பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் பயன்தரும் மாமரக் கன்றுகள் நடப்பட்டன. அருகிலுள்ள பாடசாலைக்கு பெறுமதி வாய்ந்த றீதுழிஷமி யலிழிஷ- மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிஷ்ஜ-ய்லிஷஉள ஊஸிளீ, ஈஷ்-ற்யியிழிஜவழ் ஊஸிளீமற்றும் க்ஷிஷ்சிஜளஷஆதீறீளஷஸஷ்உளவ் (ஊஸமி) ஸிஷ்துஷ்மிள- ஆகிய நிறுவனங்களால் முதலீடு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இந்த Solar Universe இலங்கையின் முதலாவது விவசாய மின் உற்பத்தி நிலையமாகும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# சட்ட விரோத மீன்பிடியை ஒருபோதும் அனுமதியோம்

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் திருகோணமலையில் திட்டவட்டம்




(ஹஸ்பர்)

சட்டவிரோத மீன்பிடியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இச்செயற்பாடு காரணமாக மீன் இனம் முற்றாக அழிந்து விடும். சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

-இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளைப் பணித்தார்.

திருகோணமலை மாவட்ட மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடல் நேற்று உப்புவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

மீனவர்களுக்கான மண்ணெண்ணையைச் சீராக வழங்க தற்போது இறக்குமதி செய்யப்படும் மண்ணெண்ணை போதுமானதாகக் காணப்படவில்லை. எனவே மண்ணெண் ணையை தனியார் இறக்குமதி செய்யவதற்கான அனுமதியை கோரியுள்ளோம்.அவ்வனுமதி கிடைக்கப்பெறுமாயின் மீனவர்களுக்கான மண்ணெண்ணைப் பிரச்சினையை தீர்க்க முடியும்.

நான்வருகைதந்தது மீனவர்களது பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்ப்பதற்கேயாகும். மீனவர்களது நியாயமான கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட்டு தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்- என்றும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

சட்டவிரோத மீன்பிடியை தடுக்க மீனவ சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அமைச்சு,திணைக்களம் மற்றும் மீனவ சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து செயற்படல் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும். வெறுமனே ஒரு தரப்பினால் மாத்திரம் இதனைத் தடுக்க முடியாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த பல மீனவ சங்கங்கள் இதன்போது தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தன. அந்தக் கோரிக்கைகளைத் தமக்கு எழுத்து மூலம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் வேண்டிக்கொண்டார்.

அதிகமான பிரச்சினைகளை அமைச்சர் ஆழமாக ஆராய்ந்து, சில பிரச்சினைகளை உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தீர்க்க முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மீன்பிடி திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# திருமலையில் 500 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்ட நாற்றுகள், விதைகள்




(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி, பட்டணமும் சூழலும், மூதூர், தம்பலகாமம், கிண்ணியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் - பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், வீட்டுத் தோட்டம் செய் வதற்கு உதவி கோரிய -ஐந்நூறு வறிய குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்குரிய நாற்றுகளையும் விதைகளை யும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் நேற்று முன்தினம் வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அலுவலர்கள், விவசாய சம்மேளன அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த வீட்டுத் தோட்டம் செய்வதற்கான நாற்றுகளையும் விதைகளையும் வழங்குவதற்கான அனுசரணையைக் கனடாத் திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 22 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் வெளிநாட்டு தூதுவர்களுக்கு அமைச்சர் விஜயதாஸ விளக்கமளிப்பு!





இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கும் 22ஆம் திருத்தம் தொடர்பில் இலங்கைக்கான இந்தோனேசியாவின் உயர் ஸ்தானிகர் மற்றும் சுவிட்ஸர்லாந்து தூதுவர் ஆகியோருடன் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கலந்துரையாடி உள்ளார்.

இலங்கைக்கான இந்தோனேசிய உயர் ஸ்தானிகர் தேவி குஸ்டினா டொபிங் மற்றும் சுவிட்ஸர்லாந்து தூதுவர் டொமின்க் பர்ங்ளலர் ஆகியோர் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவை நேற்று (11செவ்வாய்க்கிழமை) நீதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசமைப்பின் 22 ஆம் திருத்தத்தை அனுமதித்துக்கொள்வதன் அவசியம், இலங்கை தற்போது எதிர்கொண்டுவரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது மற்றும் இலங்கை இந்தோனேசியா மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளுடன் நீண்டகாலமாக கடைப்பிடித்துவரும் தொடர்புகளை மேலும் முன்னேற்றகமான நிலைக்கு கொண்டுசெல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 22 ஆம் திருத்தம் எதிர்வரும் 20,21ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டு அனுமதித் துக்கொள்ள இருப்பதாகவும் இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் அடுத்த கட்ட நடவடிக் கைகள் வெற்றிகமாக மேற் கொள்வதற்காக அரசமைப்பு மறுசீரமைப் பின் தேவை குறித் தும் அமைச்சர் இதன் போது அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள் ளார்.

இந்த நாட்டின் நன்மைக்காக மேற் கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக் காகவும் எமது நாட்டின் உதவி தேவைப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் அதனைப் பெற்றுத்தரத் தயாராக இருக்கின்றோம். அத்துடன் பொருளாதாரம் அரசியல் மற்றும் கலாசார ரீதியில் இரண்டுநாடுகளுக்கிடையில் இருந்துவரும் தொடர்புகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக இந்தோனேசிய உயர் ஸ்தானிகர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தால் முடியுமான உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கைக்கான சுவிட்ஸர் லாந்து தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

## பதின்ம வயதுச் சிறுமிமீது வன்புணர்வு முதியவருக்கு விளக்க மறியல் நீடிப்பு!



பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வயோதிபரின் விளக்கமறியலை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் திங்கட்கிழமை உத்தரவிட்டது.

'விசாரணைகள் நிறைவடையவில்லை. எனவே என்ன நடந்தது என்று விசாரணைகளின் போக்கில் அறியவரும். அதற்கு பின்னர் சந்தேக நபரை பிணையில் விடுவிப்பது தொடர்பில் ஆராயலாம்' என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா கட்டளை வழங்கினார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலையில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரால் வன்புணர்வுக்கு உள்படுத்தி கர்ப்பமாகி உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரைக் கைது செய்தனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைத்திருக்க அனுமதியளித்து நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த நிலையில் பதின்ம வயது சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டின் கீழ் முதியவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத் தப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.

பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மேலதிக நீதிவான், நீதிவான் முன்னிலையில் பிணை விண்ணப்பத்தை முன்வைக்குமாறு குறிப்பிட்டு சந்தேக நபரை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணத்தை முன் வைத்தார். விசாரணைகள் நிறைவடைவடையாத காரணத்தால் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மன்று சந்தேக நபரை எதிர் வரும் 21 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டது.

## 'முற்றுப்புள்ளி இடுவோம் சிறுவயதுத் திருமணங்களுக்கு' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் சிறுமியர்தினம்

கிளிநொச்சி முட்கொம்பன் பிரதேசத்தில் 'முற்றுப்புள்ளி இடுவோம் சிறுவயது திருமணங்களுக்கு' எனும் தொனிப் பொருளிலான சர்வதேச சிறுமியர் தினம் நேற்று (செவ்வாக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

முட்கொம்பன் பாடசாலை மண்டபத்தில் விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் ' முற்றுப்புள்ளி இடுவோம் சிறுவயது திருமணங்களுக்கு' எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

மேலும் மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற் படுத்தும் விதமாக பல்வேறு செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இதேவேளை செயலமர்வில் கருத் துக் களை வெளிப்படுத்தும் வகையில் கருத்துச் சித்திரங்கள் துண்டுப்பிரசுரங் கள் ஆக்கங்களாக வெளிப்படுத்தப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் மொழி சிங்களம் கற்கை நெறி பூர்த்தி நிகழ்வு







(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் உத்தியோகத்தர்களின் வேதன ஏற்றம் மற்றும் வினைதிறனான சேவை வழங்கும்பொருட்டு அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 150 மணித்தியாலயம் கொண்ட சிங்கள கற்கை நெறியை பூர்த்தி செய்த உத்தி[illegible] சான்றிதழ்கள் வழங்கி வைக்கப் பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடாத் தப்பட்ட இந்நிகழ்வில் பணிப்பாளருடன் இணைந்து பிரதி பணிப்பாளர் வைத்தி யர் எம்.பீ.ஏ வாஜித் அவர்களும் கலந்து கொண்டு பங்குபற்றுனர்களுக்கான [illegible]

## திலினி பிரியமாலியின் சிறைச்சாலைக்குள் கைத்தொலைபேசி ரூ.50 ஆயிரம் தருவதாகக்கூறி கைதி ஒருவரிடம் பெற்றதாம்!

### மேலதிக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன

நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியின் கைத்தொலைபேசி தொடர்பாக மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறையில் உள்ள பெண் கைதி ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபாய் தருவதாக கூறி இந்த கையடக்கத் தொலைபேசியை முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு இந்த கைத்தொலைபேசி எப்படி வந்தது என்பது தொடர்பாகவும் விசாரணை நடந்து வருகிறது.

தற்போது இந்தக் கையடக்கத் தொலைபேசி குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன்,

## முடியாட்சி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவின் ருவாண்டாவில் நடந்த பாரியதொரு பழங்குடிப் போர் காரணமாக கிட்டத்தட்ட ஒரு மில்லியன் உயிர்கள் பலியாகினாலும் இன்று ருவாண்டா ஆபிரிக்காவின் புதிய சிங்கப்பூர் என்று அழைக்கப்படுகின்றது.

அது இலங்கையில் போரில் இழந்த உயிர்களைவிட பெரிய தொகையாகும். அவர்கள் அபிவிருத்தியில் நாளுக்கு நாள் முன்னேறி வந்தாலும், எமது நாட்டில் போர் நிறைவடைந்து ஏறக்குறைய 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்னமும் இனவாதம் மற்றும் மதவாதத்தின் அடிப்படையில் நாட்டை அழிக்கும் திட்டத்துக்கு ராஜபக்ச குடும்பம் நாட்டை இட்டுச் சென்றது.

அவ்வாறு வங்குரோத்தடையச் செய்த ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த நாமல் நாட்டைக் கட்டியெழுப்பும் குழுவொன்றுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வரலாறு நெடுக தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்ந்த நம் நாட்டு மக்களும் முன்னின்ற நாடும், மொட்டு அரசாலும் ராஜபக்ஷ குடும்பத்தாலும் வங்குரோத்தடையச் செய்யப்பட்டதாக அரசியல் வரலாற்றில் எழுதப்படும்.

தற்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்ஷர்கள் கைப்பாவையாக பாவித்து தமக்கு நெருக்கமாகவிருக்கும் நபர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி வருகின்றனர்.

விவசாயிகள், மீனவர்கள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனச் சகலரையும் அவர்கள் சிரமத்துக்குள்ளாக்கினர்.

அமெரிக்கவின் செனட் சபையில் இது குறித்து அறிக்கை கூடத் தயாரிக்கப்பட்டுள்ளது. முதன் முறையாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட நமது நாட்டில் பொருளாதார உரிமைகள் அழிக்கப்படுவது குறித்து விவாதிக்கின்றது.

சமூகத்தின் மிகச்சிறிய அலகிலுள்ள தனிமனிதன் முதல் தொழில் வல்லுநர்கள், அரச ஊழியர்கள் உட்பட அனைவரினதும் பொருளாதாரத்தையும் ராஜபக்ஷர்கள் அழித்தனர். இதன் காரணமாக, மக்களின் போதிய உணவு மற்றும் கல்விக்கான உரிமைகள் கூட மீறப்பட்டுள்ளன.

குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்தவாறு உரப் பிரச்சனையைத் தீர்க்க முயல்கின்றனர். ஒரு நிமிடமேனும் கூட விவசாயிகள், மீனவர்கள் அருகில் செல்லாது, தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அமைச்சர்கள் தமது சிறப்புரிமைகளை அதிகரித்து, மொட்டுக்கு அதிக அமைச்சுகளை வழங்கி தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கே முயற்சிக்கின்றனர்.

இதுவரை எழு மூளைக் காகம் 38 இராஜாங்க அமைச்சர்களின் பெயர்களை வழங்கிய நிலையில், ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான மேலும் 12 அடிமைகளின் பெயர்களை அமைச்சுப் பதவிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளன. இதனூடாக மீண்டும் ஆட்சியைப் பெற முயற்சித்தாலும் மக்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே இருக்கின்றனர்.

அமைச்சர்களின் பிள்ளைகள் கற்கும் அனைத்துப் பாடசாலைகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைத் திரைகள், ஆங்கிலக் கல்வி என்பன அடிப்படையாக இருந்தாலும், நாட்டின் பிற மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் இதுபோன்ற வசதிகள் குறைந்தபட்சமே உள்ளன.

இது எதிர்காலத்தில் தொழிற்சந்தையைக் கூட பெரிதும் பாதித்துள்ளது. நாட்டில் இவ்வாறான இடைவெளியை ஏற்படுத்தியிருந்தும் தேர்தலின் போது சிங்களவாதம், பௌத்தவாதம் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

நமது கல்வி முறையின் மூலம் உலகையே வெல்லக்கூடிய மாணவ தலைமுறையை உருவாக்க முடியும். அவர்களுக்குச் சமமான கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டால், தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்து உலகையே வெற்றிகொள்ள முடியும் – என்றார்.

## இராணுவ.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு மற்றும் போஷணையை உறுதி செய்யும் நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்தும்போது அரச பொறிமுறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக் காரணமாக ஏதேனும் பிரச்சினைகள் உருவாகுமாயின் அதனைச் சரிசெய்வதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் தலையிடுவதற்குத் தயார் என்றும் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

மேலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்குக் கூடாக விவசாயத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை இயற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

'எந்தவொரு பிரஜையும் உணவின்றி பசியால் வாடக்கூடாது' என்ற தொனிப்பொருளில் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்கு கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையத்தை பலப்படுத்தும் பல் துறைகளின் ஒன்றிணைந்த பொறிமுறையொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் அண்மையில் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தின் மாவட்ட மட்ட முன்னேற்றம் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத் தப்பட்டது.

மேலும் அனைத்து மாவட்டங்களிலும் கிராம மட்டத்தில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது எனவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்குப் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ற வகையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, எரிபொருள் மற்றும் தேவையான உரத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும், காணிப் பிரச்சினை, விதைப் பற்றாக்குறை, வன விலங்குகளால் ஏற்படும் சேதங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் மாவட்ட செயலாளர்களால் முன்வைக்கப்பட்ட முன்னேற்றங்கள் குறித்து அவதானம் செலுத்திய ஜனாதிபதி, உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதற்கும், கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கைகளைத் தனித்தனியாக இனங்காணுவதற்குமென உணவுப் பற்றாக்குறை நிலவுகின்ற பிரதேசங்களை இனங்கண்டு அது தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் மாவட்டம் தோறும் மாவட்ட செயலாளர்கள் தலைமையில் உணவு வங்கி மற்றும் சமூக சமையலறை ஆகிய வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தத் திட்டமிடுமாறும் தெரிவிக்கப்பட்டது.

அரச சேவையில் தற்போது தேவைக்கு அதிகமானவர்கள் இருப்பதால் அவர்கள் அனைவரையும் இந்த வேலைத்திட்டத்தில் இணைத்துக் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

2023ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துமாறும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலகப் பொருளாதார நெருக்கடிக்குத் தயாராகுவதற்கும் மக்களின் போக்குத் தேவையை உறுதிப்படுத்துவதற்கும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மூன்று வாரங்களின் பின்னர், வாரத்துக்கு ஒருமுறை இந்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, புதிதாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு காணிகள் வழங்குவதை துரிதப்படுத்தல் மற்றும் அதற்காக முறையான பொறிமுறையைப் பின்பற்றுவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று எதிர்வரும் மழைக் காலம் புதிய பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமாக உள்ளதால், தாமதமின்றி பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு கிராம மட்டத்தில் மக்களைத் தெளிவூட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் பிரதமர் இங்கு விளக்கமளித்தார்.

அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி. சுரேன் படகொட மற்றும் துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## 9 வயது.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட பெண் சிறுமியின் தந்தையின் இரண்டாவது மனைவி எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்குரிய பெண்ணுக்கு முந்தைய திருமணத்தில் ஒரு ஆண் குழந்தையும் இருக்கின்றது எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான பெண் அதிகாலை 4 மணியளவில் சிறுமியை எழுப்பி தேங்காய் உரிக்கவும், காய்கறிகளை வெட்டவும், பானைகளை கழுவவும், குழந்தை மற்றும் அப்பெண்ணின் ஆடைகளை கழுவவும் உத்தரவிட்டுள்ளார். ஒருமுறை வேலை தவறினால் அந்த சிறுமியை மரத்தில் கட்டி வைத்து அடித்து துன்புறுத்தியுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை சந்தேகநபர் சிறுமியை தரையில் வீசி கால்களை மிதித்து, முழங்காலால் வயிற்றில் அடித்துள்ளார் என்று சிறுமியின் வாக்கு மூலத்தில் தெரியவந்துள்ளது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் தனது குழந்தையுடன் படுக்கையில் உறங்குவதோடு, சிறுமிக்குக் கிழிந்த பாய் ஒன்றை வழங்கி கீழே உறங்கச் செல்லியுள்ளார்.

சிறுமி வீட்டுக்குள் குளியலறையில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டின் பின்புறமுள்ள கழிவறையில் பொருத்தப்பட்டுள்ள குழாயில் இருந்து சிறுமியைக் குளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. .

சிறுமியின் உடலில் பல தீக்காயங்கள் மற்றும் காயங்கள் இருந்தன என்றும், சில இடங்களில் தொடும் போது வலியால் அவதிப்படுகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி முல்லேரியா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காகச் சேர்க்கப்படவுள்ளார். அதேவேளை, சந்தேகநபர் கடுவெல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2022இல் வெளியிடப்பெற்றது.